யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஞு மார்ச்சுமீ 22உ, சனிக்கிழமை. [இதழ் நெ. 1.

வாரச் செய்திக் குறிப்புகள்.

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் ஆகாய விமானப் போர்.

சென்றவாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியின் முக்கிய நகரங்களின் மேல் வெடிகுண்டு மரி பெய்தது குறிப்பிடத்தக்கது. யுத்தம் ஆரம்பித்த கால முதல் இதுவரைக்கும், இம்மாதிரி இடைவிடாது ஜெர்மனியை ஆகாயத்திலிருந்து கடூரமாகத் தக்கியது இடையாதென்று சொல்லலாம். ஒரு பெரிய பிரிட்டிஷ் வெடிகுண்டு படை, ஜெர்மனியில், ஹாம்பர்க், ப்ரெமென், பர்லின் என்ற மூன்று இடங்களை, இருட்டின பிறகு ஆரம்பித்து, விடியும்வரை, பல மணி நேரங்களாகத் தாக்கியுள்ளது. ஜெர்மனியின் தலைநகரான பர்லின் மேல் போட்ட வெடிகுண்டுகளினுல் பல இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டது. வெடிகுண்டு போட்டுவிட்டு திரும்பி பிரிட்டனுக்குச் செல்லும்போது, 100 மைலுக்கப்பாலிருந்துகூட பர்லினில் பிடித்த நெருப்புகள் தெரிந்தன என்று பிரிட்டிஷ் ஆகாய விமானிகள் அறிவித்திருக்கிறுர்கள். பர்லின் மேல் பறந்தபோது, அங்குள்ள தெருக்கள், ரயில்வேக்கள், ஏரிகள் முதலியன பட்டப்பகலில் தெரிவதைப்போலத் தெரிந்தன என்று அவர்கள் கூறினுர்கள். பிரிட்டிஷ் விமானப்படை தாக்குதலினுல் 26 பேர் இறந்துபோனுர்கள் ; 28 பேர் காயமடைந்தார்கள்.

ப்ரெமென் என்பது யுத்தச் சாமான்கள் தயார் செய்யும் முக்கியமான ஜெர்மன் நகரம். அதை ஒன்று சேர்ந்து பல பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் விடாமல் தாக்கின. யுத்தத் தொழிற்சாலைப் பிரதேசத்தில் பல வெடிகுண்டுகள் விழுந்ததன் பயனுக, கட்டடங்கள் இடிந்து, நெருப்புப்பற்றிக் கொண்டது. பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களைத் தடுத்துப் போராட, ஜெர்மன் ஆகாய விமானங்கள் முயற்சி செய்த பாதிலும், சில்லரைச் சண்டைகளோடு நின்றதே ஒழிய வேறென்றும் செய்யமுடியவில்லை. ப்ரெமென் நகரின் பல பாகங்களில், தொழிற்சாலைப் பிரதேசங்களில் நெருப்புப் பிடித்து எரிந்ததாகவும், கட்டடங்கள் தீயினுல் பாதிக்கப்பட்டதாகவும், பிரிட்டிஷ் ஆகாய விமான மந்திரி சபை அறிக்கை கூறுகிறது.

ஹாம்பர்க் என்ற இடத்தில் இரவு 10-மணிக்கு மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. துறைமுகப் பிரதேசத்திலும், கப்பல்கட்டும் சாலைகளிலும் அவைகள் விழுந்தன. பிடித்துக்கொண்ட நெருப்பு அதிக உயரமாக ஜுவாலைவிட்டு எழுந்ததென்றும், 70 அல்லது 80 மைலுக்கப்பால் விமான ஓட்டிகளுக்குத் தெரிந்ததென்றும் கூறப்படுகிறது. எல்பி நதியின் இருகரை போரங்களிலும் உள்ள கப்பற் சாலைகள், பண்டக சாலைகள், தொழிற் ஈலைகள் முதலியவை தீப்பிடித்துக்கொண்டு எரிந்தன. 5,000 அடிக்கு மேல் உயரத்தில் புகை எழுந்ததென்ருல், எவ்வளவு பெரிய தீயாயிருக்கவேண்டுமென்பது தெரிகிறது. ராட்டர்டம் என்ற இடத்தில் எண்ணெய் சேமித்து வைத்திருக்கும் பெரும் களஞ்சியங்களின் மேல் வெடிகுண்டு போட்டதால் அங்கு ஒரு பெருந் தீ உண்டாயிற்று. ரூர் என்ற பிரதேசத்தில், தொழிற்சாலைகளும், போக்குவரத்து சாதனங்களும், நிலக்கரியிலிருந்து எண்ணெய் எடுக்கும் யந்திர சாலைகளும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் தாக்கப்பட்டன.

ஜெர்மனியில் நடந்த விமானச் சண்டையில் 5 பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் திரும்பிவரவில்லை. ரூர் பிரதேசத்தில் நடந்த சண்டையில், ஒரு வெடிகுண்டு விமானமும், ஒரு கரையோரப் பாதுகாப்பு விமானமும் பிரிட்டனுக்கு நஷ்டமாயிற்று.

டஸ்ஸல் டார்ப் என்ற ஜெர்மன் தொழிற்சாலைப் பிரதேசத்தை, பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானப் படை தாக்கியதோடு நில்லாமல், லோரியன்ட் என்ற இடத்தில் உள்ள சப்மரைன் நிலையத்தின்மேலும் வெடிகுண்டுகள் போட்டது.

இது இப்படி இருக்க, ஜெர்மனியின் ஆகாய விமானங்கள் பிரிட்டன்மேல் சண்டையிட்ட விவரங்களைக் கவனிப்போம். கிளைட் சைட் என்ற இடத்தை ஜெர்மன் விமானங்கள் தாக்கி, வர்த்தகக் கட்டடங்கள், சில வீடுகள் இவைகளைப் பழுதாக்கின ; சிலர் இறந்தனர் ; அநேகர் காயப்படுத்தப்பட்டனர்.

நிலா வெளிச்சத்தில் லண்டனைத் தாக்கவந்த ஜெர்மன் ஆகாய விமானங்களில், மூன்று பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் சுடப்பட்டு வீழ்த்தப்பட்டன ; இரண்டு ஆகாய விமானங்களை சுடும் பீரங்கிகளால் அழிக்கப்பட்டன. இத்தோடு மார்ச்மாத ஆரம்ப முதல் இதுவரைக்கும் 40 ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப்பட்டன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஜெர்மன் விமானங்கள் மார்ச் முதலிலிருந்து 17 ஆகிறது.

பிரிஸ்டல் நகரைத் தாக்கிய ஜெர்மன் விமானங்கள் அநேக நெருப்பு வெடிகுண்டுகளைப் போட்டன. பல இடங்களில் தீப்பிடித்தபோது, தீ அணைக்கும் யந்திரங்கள் தீயைப் பரவவிடாமல் அடக்கி அணைத்துவிட்டன. லண்டனுக்கு அருகில் உள்ள சிறு ஊரில் ஒரு நடனசாலையில் வெடிகுண்டு விழுந்து, மூன்று பெண்கள் இறந்துபோனுர்கள் ; பலருக்குக் காயம். கூட்டம் அதிகமாயிருந்த ஒரு பஸ் வெடிகுண்டு வெடித்த அதிர்ச்சியால் புரண்டுவிழுந்து அநேகர் இறந்துவிட்டார்கள்.

ஹல் என்ற பிரிட்டிஷ் கப்பற்கட்டும் கரையோரப் பட்டணத்தின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. சில வீடுகள் இடிந்து விழுந்தன ; சிலர் விழுந்த வீட்டிற்கடியில் அகப்பட்டு உயிர்துறந்தார்கள்.

இன்றுவந்த செய்திகளில், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ரைன் நதிக்கரை, லோரியண்ட், கலோன் முதலிய பகைவர்களுடைய இடங்களை வெடிகுண்டு போட்டுத்தாக்கியதென்றும் பெருத்தசேதம் விளைவித்ததென்றும் தெரிகிறது.

2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

அபிசீனியாவில் இடாலியர்களுக்கு தோல்வி கிடைத்துக்கொண்டே இருக்கிறது. அபிசீனியத் தேசபக்தப் படைகள், பெரி என்ற இடத்தைவிட்டு ஓடும் இடாலியச் சேனைகளைத்தாக்கி, பெருத்த நஷ்டத்தை உண்டாக்கின. ஆப்பிரிக்காவில் இடாலிய சேனைகளுக்கு, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை தகுந்த தண்டனையைக் கொடுத்துவருகிறது.

பிரிட்டிஷ் சிப்பாய்கள் ஜிக்ஜிகாவுக்குப் போகும் ரோட்டில் வெகுதூரம் முன்னேறி வந்திருக்கிறுர்கள் ; மோகதீசுவிலிருந்து அட்டிஸ் அபாபாவுக்கு, நேகெல்லி வழியாக வரும் முயற்சியில் இருக்கிறுர்கள். தென்னுப்பிரிக்காவின் ஆகாய விமானப்படை டீர்டவா என்ற இடத்தில் 8 இடாலிய ஆகாய விமானங்களை அழித்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் படைகள் வெகு விரைவாகவும், திடும்பிரவேசமாகவும், காரியங்கள் செய்து, பகைவர்களுடைய எண்ணங்களைக் கலைத்து, இடாலியின் சோமாலிலாண்டு பிரதேசத்தைக் கைப்பற்றியது ஒரு பெரிய வெற்றியாகும். சோமாலிலாண்டிலுள்ள இடலியின் பிரதம தளகர்த்தர் மழைக்காலம் போனபிறகுதான் பிரிட்டிஷ்காரர்கள் முன்னேறுவார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தார்.

4367
14504

திடீரென்று பிரிட்டிஷ் படைகள் வரும் என்று கனவில்கூட அவர்கள் நினைக்கவில்லை. பிரிட்டிஷ் மோடார் போக்குவரத்து சாதனத்தின் அமைப்பைக் கண்டு, இடாலியர்கள் ஆச்சரியப்பட்டு, பொருமைப் படுகிறார்களென்று தெரிகிறது.

இப்போது பிரிட்டிஷ்காரர்கள் தம்முடைய சோமாலிலாண்டுக்குத் தலைநகரமான பர்பாரா என்ற இடத்தை, இடாலியர்களிடமிருந்து திருப்பிப் பிடுங்கிக்கொண்டார்கள். தரை, கடல், ஆகாயம் ஆகிய மூன்று மார்க்கங்களில் ஒரே சமயத்தில் தாக்கியது தான் இவ்வெற்றிக்குக் காரணம். இடாலியர்கள் எதிர்க்க முயன்றதைப் பிரயோசனமில்லாததாக்கி விட்டு, 100 இடாலியர்களைக் கைதியாகப் பிடித்தார்கள் பிரிட்டிஷ்காரர்கள்.

எரீட்ரியாவில், 105 டிகிரி உஷ்ணத்தில், கீரன் போர் முனையில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. பகைவர்கள் திருப்பித்தாக்குகிறார்களென்றும், அவர்களை வெற்றிகரமாக பிரிட்டிஷ்காரர்கள் தடுத்து வருகிறார்களென்றும் தெரிகிறது. இடலிக்கு இந்தச் சண்டையினால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ரோம் ரேடியோவில் ஒத்துக்கொள்ளப்பட்டது. கீரனைப் பிடித்துவிட்டால் எரீட்ரியாவையும் இடாலிய ஆப்பிரிக்கா முழுவதையும் பிடித்ததுபோல்தான். கிழக்காப்பிரிக்காவில் நடந்து வரும் சண்டை மகிழ்ச்சியடையும்படியான முறையில் நடந்து வருகிறது.

பிரிட்டிஷ் சேனைகள் யாவவல்லோ என்ற இடத்தைப் பிடித்ததாகவும், கொரன் பிரதேசத்தில் விமானப்படை வெடிகுண்டுகளைப் போட்டதாகவும் இன்று வந்த செய்திகள் கூறுகிறது.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

"லீஸ் அண்டு லெண்டு பில்" அல்லது வாடகை-கடன் மசோதா அமெரிக்க சட்டசபையில் நிறைவேறிவிட்டதனால், யுத்த சம்பந்தமான சகல பொருள்களும் தீவிரமாக அமெரிக்காவில் செய்யப்பட்டு பிரிட்டனுக்கு அனுப்பப்படுகிறது. சில சாமான்கள் கப்பலில் ஏற்றி உடனே அனுப்பப்பட்டன. இதைப்பற்றி மிஸ்டர் ஹென்றி ஸ்டிம்சன் என்ற அமெரிக்க யுத்த மந்திரி முழு விவரங்களையும் தான் இப்போது சொல்லக்கூடாதென்று தெரிவித்தார். 70 கோடி டாலர்கள் பிரசிடென்ட் ரூஸ்வெல்டினால் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தத்தொகையைக் கொண்டு பிரிட்டனுக்கும், அதைச் சார்ந்த துணை நாடுகளுக்கும் யுத்த உதவி ஆயுதங்கள் வாங்கப்படுமென்றும், அடுத்த 16 மாதங்களுக்குள் அந்தப் பெரிய தொகை முழுவதும் இதற்காகச் செலவிடப்படும் என்றும் தெரிகிறது. இந்த உதவி எம்மாதிரியான விதத்தில் இருக்கவேண்டும் என்பதைக் கலந்தாலோசிக்க, சர் ஆர்தர் சால்டர் என்ற பிரிட்டிஷ் கப்பல் மந்திரி சபையின் காரியதரிசியை அமெரிக்காவுக்குப் போகும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் யுத்த உதவி சம்பந்தமாகப் பேசின பேச்சைக்குறித்து, பிரிட்டிஷ்காரர்களுடைய நன்றியறிதலை, பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஒரு கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். அதே கூட்டத்தில் அமெரிக்காவின் பிரதிநிதி, மிஸ்டர் ஜான் வினண்ட் பிரிட்டிஷ் மக்கள் உலக சுதந்தரத்துக்காகப் போராடி வருவதைப் பாராட்டிப் பேசினார்.

"அட்லாண்டிக் சமுத்திரத்தில் இப்போது நடைபெறும் சண்டை, இந்த யுத்தத்திலேயே மிகவும் முக்கியமானது, வெற்றிபெறும்படியான இந்த மார்க்கத்தில் திரும்பும் சமயத்தில், மிஸ்டர் ஜான் வினண்ட் வந்திருக்கிறார்" என்று மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கிறார்.

4. க்ரீசும், இடலியும்.

க்ரீசுக்கும், இடலிக்கும், அல்பேனியாவில் நடந்து வரும் சண்டையில், சென்ற வார முதலில், கடுமையான போரின் காரணமாக மூன்று இடாலிய சேனைகள் அடியோடு அழிக்கப்பட்டன. க்ரீசிய ஆகாய விமானங்கள் இடலியின் யுத்த தளவாடங்களின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டன; சில இடாலிய ஆகாய விமானங்களைச் சுட்டு வீழ்த்தின.

இடலியின் சர்வாதிகாரி முசலோனி, அல்பேனியாவுக்குப் போனது யாதொரு பிரயோசனத்தையும் உண்டாக்கவில்லை. இடாலியத் துருப்புகள் பீதியடைந்து கலக்கமுற்று இருப்பதை மாற்றி தைரியப்படுத்த முசலோனியால் முடியவில்லை. வெற்றியுடன் திரும்பலாம் என்ற எண்ணத்துடன் வந்த முசலோனி, ஒரு பெரிய தோல்வியையும், இடாலியச் சேனைகள் சப்பைப்புகளையும் கொண்டு திரும்பவேண்டிவந்தது.

முசலோனி அல்பேனியாவுக்குப் போன பிறகு நடந்த சண்டையில், 10,000 இடாலியர்கள், கொல்லப்பட்டு, காயப்படுத்தப்பட்டு அல்லது கைதியாக்கப் பட்டதுதான் முக்கியமான விஷயம். இதல்லாமல் க்ரீசியர்கள் இரண்டு தளகர்த்தர்கள் 12 ஆபீசர்கள் அடங்கிய 240 இடாலியர்களைக் கைது செய்திருக்கிறார்கள். டிபலேனி என்ற இடத்துக்கு வடக்கே உள்ள க்ளாவா—புதி பாதையில் கூட்டங் கூட்டமாகச் சேகரித்து வைக்கப்பட்ட இடாலிய சேனைகள், மோடார் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவைகளின்மேல், க்ரீசுக்கு உதவி செய்யும் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை வெடிகுண்டு மாரி பெய்தது, இதனால் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது.

அல்பேனியாவில் இடலியின் பிரதம தளகர்த்தராக இருக்கும் ஜெனரல் காவலேரோ தானே வேலையைவிட்டு விலகிவிட்டார், அல்லது வேலையிருந்து நீக்கப்பட்டார் என்று தெரிகிறது. ஏனென்றால், யுத்த உத்தரவுகளெல்லாம் இப்போது வேறொரு தளகர்த்தரான ஜெனரல் ஜிலோசோவால் கையெழுத்திடப் படுகின்றன.

ரோம் ரேடியோவில் இவ்வார முதலில் க்ரீசியப் போர் முனையில் இடாலிக்கு மிகச் சூடான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

க்ரீஸ் சேனைகள் டெபெலினி என்ற இடத்தில் பிரவேசித்துவிட்டதாகவும், வெலோனாவுக்குப் போகும் பாதையில் இடாலியர்களுடைய கடைசி பட்டணம் கடுமையான சண்டைக்குப்பிறகு கைப்பற்றப்பட்டதென்றும், இதைத்தொடர்ந்து க்ரீஸ் சேனைகள் போர்புரிந்து முன்னேறிப் போய்க்கொண்டிருக்கின்றனவென்றும், இன்று வெளியான செய்திகள் கூறுகின்றன.

5. பால்கன்ஸ்.

பால்கன் நாடுகளில் க்ரீஸ் இடாலியை ஒரு பக்கம் விரட்டி யடித்துக்கொண்டிருக்கிறது; மற்றொரு பக்கம் யூகோஸ்லாவியா ஜெர்மனிக்கு இடங்கொடுக்காமல் தடை செய்துகொண்டு வருகிறது. இந்தத் தடையினால் ஹிட்லருடைய பால்கன் கால அட்டவணை தலைகீழாக மாற்றப்பட்டது. யூகோஸ்லாவியா இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கும் என்ற செய்தி ஹிட்லர் செய்த சதியாலோசனைகளை ஒரு பெரிய அளவுக்குக் கலைத்துவிட்டது.

இன்று வெளியான செய்திகளில், ஜெர்மனிக்கு அனுகூலமாய் வேலை செய்துவந்த யூகோஸ்லாவியாவின் மாஜி முதன் மந்திரி, யூகோஸ்லாவியாவிலிருந்து வெளியேற்றப்பட்டுக் கிரீசுக்குச் சென்றிருக்கிறாரென்றும், ஜெர்மனியின் விஷயத்தில் யூகோஸ்லாவியா மக்களும் பத்திரிகைகளும் உறுதியான விரோத மனப்பான்மை கொண்டிருக்கிறார்களென்றும், பர்லினில் யூகோஸ்லாவியாவைப்பற்றி மௌனம் சாதிக்கிறார்களென்றும், யூகோஸ்லாவியாவை பிரிட்டனும், அமெரிக்காவும் பயமுறுத்துகின்றன என்பதுபோன்ற பொய்ப் பிரசாரங்களை ஜெர்மனி செய்துகொண்டுவருகிறதென்றும், கூடிய சீக்கிரம் யூகோஸ்லாவியா விஷயத்தில் ஏதாவது முயற்சி நடைபெறுமென்றும், ஆனால் யூகோஸ்லாவியா எல்லாவற்றிற்கும் தயாராக யுத்த முஸ்தீப்புடன் இருக்கிறதென்றும் தெரிகிறது.

இப்போது ஜெர்மனி க்ரீசைத் தாக்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், இரண்டு மூன்று நாட்களுக்குள் க்ரீசில் தலையிடலாமென்றும், அமெரிக்காவின் பத்திரிகை, "நியூயார்க் டைம்ஸ்" நிருபர் கூறுகிறார்.

பல்கேரியாவின் அரசர் பாரிஸ் என்பவர் ஜெர்மனியின் ராணுவ சம்பந்தமான ஏற்பாடுகளில் ஒத்துழைத்து வருவதாகத் தெரிகிறது.

6. கப்பல் நிலைமை.

பகைவர்களுடைய தாக்குதல்களினால் பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல்கள் சில சேத மடைந்திருக்கின்றன. 20 பிரிட்டிஷ் கப்பல்களும், 5 பிரிட்டிஷ் நேசதேசக் கப்பல்களும் ஒரு வாரத்தில் சேதமடைந்ததாக பிரிட்டிஷ் அட்மிரால்டி சென்ற வாரம் விடுத்த அறிக்கையில் கூறுகிறது. ஆனால், அட்லாண்டிக் கடலில் நடக்கும் யுத்தத்தில், வெற்றி பெறுவதற்கு முன்பு, இன்னும் அதிகமான கப்பற் சேதங்கள் ஏற்படுமென்றும், அதற்கெல்லாம் பிரிட்டன் தயாராக இருக்கிறதென்றும் தெரிகிறது.

பிரிட்டிஷ் சப்மரீன் "அட்மோஸ்ட்" என்பது இடாலிய சேனைகள் அடங்கிய 6,000 டன் 4,000 டன் எடையுள்ள இரண்டு கப்பல்களை வெடிகுண்டு 'டார்பிடோ' களினால் தாக்கிற்று. ஒரு கப்பல் அடியோடு சிதறடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. 'ட்ரையம்ப்' என்ற மற்றொரு சப்மரீன் இரண்டு இடாலியச் சாமான் கப்பல்களையும் 'யுனிக்' என்ற சபமரீன் வேறொரு இடாலியக் கப்பலையும் முழுகடித்தது.

7. ஜப்பானும் சைனாவும்.

சென்றவாரம் மத்திய சைனாவிலிருந்து, ஜப்பானிய துருப்புகள் திரும்பிப் போய்விட்டதாகவும் துங்செங் என்ற 29 மாத காலமாக கைப்பற்றியிருந்த பிரதேசத்தை விட்டுவிட்டதாகவும், மார்ச் 1939-ல் பிடித்த வூடிங் என்ற பிரதேசத்தையும் காலிசெய்துவிட்டதாகவும் தெரிகிறது. ஜப்பானியச் சேனையைச் சேர்ந்த ஒருவர் இதைப்பற்றிப் பெருமையாகக் கூறும்போது சௌகரியமான இடங்களைப் பிடிப்பதற்காக, அசௌகரியமான இடங்களை விட்டுவிட்டதாகச் சொல்லுகிறார். துங்செங் என்ற இடம் இப்போது சீனத் துருப்புகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது. செங்கு என்ற இடத்தில் நடந்த ஆகாய விமானச் சண்டையில், ஐந்து ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. சுவாங்கே என்ற பட்டணத்தை, மூன்று நாள் கடுமையான போர் நடத்தி சீனர்கள் பிடித்துக்கொண்டார்கள். யாங்டீஸ் நதிக் கரையில் பலத்த சண்டை நடந்துகொண்டிருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து சைனாவுக்கு 40 ஆகாய விமானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் சைனாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. சீன அரசாங்கம் 100 ஆகாயவிமானங்கள் கேட்டிருந்தது, இன்னும் நான்கு "பறக்கும் கோட்டை" களைச் சைனாவுக்கு விற்பதற்கு, அமெரிக்கா ஒத்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் உதவியைக் கொண்டு, சைனாவின் ஆகாய விமானப்படையை சீர்திருத்தி, பலப்படுத்த சீன அரசாங்கம் எண்ணியிருக்கிறது.

"சைனாவை ஜெயிக்கமுடியாது, உங்களுக்கு மிஸ்டர் சர்ச்சிலும், அமெரிக்கர்களுக்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும் இருப்பதுபோல, எங்களுக்கு ஜெனரல் சியாங்கே ஷக் இருக்கிறார்"—என்று லண்டன் மாநகரில், சீனப்பிரதிநிதி, மிஸ்டர் கோதைஷி கூறியிருக்கிறார்.

ஹூபே மாகாணத்தில் ஊலிங் என்ற இடத்தில் 300 ஜப்பானியத்துருப்புகள் கொல்லப்பட்டன. ஜப்பானிய ஆகாய விமானங்கள் பகைவர்கள் என்று நினைத்துக்கொண்டு தங்களுடைய துருப்புகளையே வெடிகுண்டு போட்டு அழித்துவிட்டன.

8. விஷி.

ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட விஷி அரசாங்கம் என்ற பிரெஞ்சு அரசாங்கத்தின் நிலை சென்ற வாரத்தில் ஒன்றும் மாறவில்லை.

விஷி அரசாங்கம் பிரெஞ்சு மொராக்கோவில் உள்ள நாட்டு மக்களில் சிலரை, பிரஞ்சு ஆலோசனை சபைக்கு ("கன்சல்டேடிவ் அசெம்பிளி") நியமிக்கப்போவதாக, ஸ்பெயின் சமாச்சார ஸ்தாபனத்தின் டாஞ்சியர் நிருபர் கூறுகிறார். ஆனால் மொராக்கோவில் பெரிய சமூகமாக உள்ள முஸ்லீம்கள் இந்த ஏற்பாட்டை வெறுக்கிறார்களென்றும், அதைத் தடுப்பதற்காக, ரத்தத்தியாகம் செய்யவும் தயாராயிருக்கிறார்களென்றும் தெரிகிறது.

9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில் ஒன்றாகிய நார்வேயை ஒரு ஜெர்மன் 'காலனி' அல்லது ஜெர்மானியர் குடிபுகும் நாடாகச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. நார்வேயின் ஜல சக்தியை மின்சாரமாக்குவதற்காக நாஜி கமிஷனர் ஜோசப் டர்போவன் என்பவரால் ஒரு கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆரி ஜலவீட்சியின் அருகே ஒரு புதிய பட்டணம் கட்டப்படுமென்றும், அதில் 6,000 அல்லது 7,000 ஜனங்களைக் கட்டாயப்படுத்தி வசிக்க உத்தரவிடப்போவதாகவும்தெரிகிறது. நார்வீஜிய மக்கள் தங்களுடைய நாட்டு ஜல சக்தியை ஜெர்மனி தன்னுடைய யுத்த சாமான்கள் செய்வதற்கு உபயோகப்படுத்தும்; அதனால் நாட்டு மக்களுக்கு யாதொரு நன்மையுமில்லை; நாட்டினுடைய பொருளாதார நிலைமை மேலும் கெட்டுவிடும் என்று வருந்துகிறார்கள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகள் படும் கஷ்டங்களைப்பற்றி, வெளிநாட்டிலாகா உதவி காரியதரிசி மிஸ்டர் ஆர். ஏ. பட்லர் கூறியிருக்கிறார். ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், இந்த அடிமை நாடுகள் ஒரு வருஷத்தில், 115 கோடி பவுன் நாணயங்களாகவும், பண்டங்களாகவும் ஜெர்மனிக்குக் கொடுத்துக்கொண்டு வருகின்றன என்று சொன்னார். ஒவ்வொரு நாடும் வருஷத்தில் எவ்வளவு கொடுக்கின்றன, ஆனத்தொகையில் தலைக்கு வீதாசாரம் எவ்வளவு வருகிறது என்பதை அவர் புள்ளி விவரங்களுடன் கூறினார். அந்த விவரங்கள் பின்வருமாறு :—

நாட்டின் பெயர்.	ஜெர்மனிக்குக் கொடுக்கும் தண்டத்தொகை.	தலைக்கு ஏற்பட்ட தொகை.
நார்வே ..	6 கோடியே 80 லட்சம் பவுன்.	25 பவுன்.
டென்மார்க் ..	2 கோடியே 60 லட்சம் பவுன்.	8 ,,
பெல்ஜியம் ..	7 கோடியே 50 லட்சம் பவுன்.	8 ,,
ஹாலந்து ..	5 கோடியே 40 லட்சம் பவுன்.	6 ,,
பிரான்சு ..	82 கோடியே 70 லட்சம் பவுன்.	20 ,,

இவையல்லாமல், போலந்து, செக்கோஸ்லாவாக்கியா, ரூமேனியா, பல்கேரியா முதலிய தன் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிடமிருந்து, ஜெர்மனி கைப்பற்றிவரும் பொருட் கணக்கு விவரங்கள் அகப்படவில்லை என்று மிஸ்டர் பட்லர் கூறினார். எல்லாவற்றையும்விட நார்வேயின் பளுவுதான் மிக அதிகம் என்று அவர் குறிப்பிட்டார்.

வேறொரு பளுவு என்னவென்றால், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகள் ஏற்றுமதிச் சாமான்களை யெல்லாம் ஜெர்மனிக்கு அனுப்பிவருவதுதான்.

10. நடுநிலைமை நாடுகள்—ஸ்பெயின், ரஷ்யா.

இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகித்துவரும் ஸ்பெயினும் ரஷ்யாவும் சென்றவாரம் அக்கொள்கையையே பின்பற்றி இருந்தன.

ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள தொடர்பைப் பற்றி, கர்னல் வெட்ஜ்வுட் பார்லிமெண்டில் ஒரு கேள்வி கேட்டார். ஜெனரல் சிகோர்ஸ்கி என்ற போலண்டின் முதன் மந்திரி சமீபத்தில் ஒரு ரேடியோ பேச்சில் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் சண்டை நடக்கும் என்ற அர்த்தத்தில் பேசியிருப்பதாகவும், பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் நேசமனப்பான்மை அதிகரிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படும் என்று போலண்டின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்றும் கர்னல் வெட்ஜ்வுட் சொன்னார். அவருக்குப் பதிலளிக்கையில், வெளிநாட்டு உதவி மந்திரி மிஸ்டர் ஆர். ஏ. பட்லர் போலண்டின் முதன் மந்திரி அம்மாதிரி பேசவில்லை என்றும், பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் நேசமனப்பான்மை வளர்ப்பது அந்தந்த அரசாங்கத்தின் பொறுப்பென்றும் பதிலளித்தார்.

வடக்கு ஆப்பிரிக்காவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் நடக்கும் சண்டை.

பிரிட்டிஷ் வெற்றிகளைப் பற்றிய விவரங்கள்.

ஈஜிப்டு தேசம், சூயஸ் கால்வாய், சிகப்புக்கடல், இந்தியா—இவைகளெல்லாம் இடாலியால் தாக்கப்படக்கூடும் என்ற பயம் இருந்தது; ஆனால் இப்போது, முடிவாக, அப்பயத்திலிருந்து இந்த பிரதேசங்கள் தப்புவிக்கப்பட்டன.

இது எப்படி நடந்தது ?

பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரி அந்தோனி ஈடன் என்பவர், 1940-வது வருஷம், நவம்பர் மாதத்தில் ஈஜிப்டு தேசத்துக்குப் போனார்; அவர் மூலமாக, யுத்த உதவி அதிகமாக வேண்டியிருந்தால் அனுப்பமுடியும் என்று ஜெனரல் வேவல் என்ற தளகர்த்தருக்கு, பிரிட்டிஷ் முதன் மந்திரி சர்ச்சில் குறிப்பிட்டார். அப்படியே, ஜெனரல் வேவல் யுத்த உதவி கேட்டார்; கேட்ட உதவி கொடுக்கப்பட்டது.

கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், பல விதமான யுத்த உதவிகள் ஈஜிப்டுக்குக் கிடைத்தது. 'டாங்க்' கிகள் என்ற மோட்டார் துப்பாக்கி வண்டிகள், துப்பாக்கிகள், பல விதமான வெடி குண்டு சாமான்கள், இவைகளெல்லாம் அனுப்பப்பட்டன. எல்லாவற்றையும் விட, ஆஸ்டிரேலியா, நியுஜீலாண்டு, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து யுத்தப் பயிற்சி பெற்ற சிப்பாய்கள் ஈஜிப்டுக்குப் போனது முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

ஈஜிப்டு தேசத்தை விடுதலை செய்து, இடாலியின் ஆப்பிரிக்க ஏகாதிபத்தியத்தை உடைப்பதற்காக, சண்டை தொடங்கியது 1940-வதுளு டிஸம்பர்மீ 7உ. சண்டையின் முதற்பாகம் சரியாக இரண்டு மாதங்களுக்குப் பிறகு முடிவடைந்தது. அதன் பயனாக, இடலிக்குச் சொந்தமான சிரிநெய்கா என்ற லிபியாவின் கிழக்கு பாகம் பிரிட்டிஷ்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

ஆப்பிரிக்காவில் இதுவரை பிரிட்டிஷ் அடைந்த லாபங்கள்.

சிரினீயா என்ற லிபியாவின் கிழக்குப் பிரதேசம்.

இடாலிய சோமாலிலாண்டில் 100,000 சதுர மைல்கள்.

வடமேற்கு அபிசீனியாவில் பெரும்பாகம்.

எரீட்ரியாவில் பல முக்கியமான இடங்கள்.

லிபியா சண்டையில் பிடிக்கப்பட்ட கைதிகள்—140,000. (ஆயிரக்கணக்காக இறந்த இடாலிய சிப்பாய்கள் இக்கணக்கில் சேர்க்கப்பட வில்லை.)

சோமாலிலாண்டில் இடாலியின் நஷ்டங்கள்—21,000 இறந்த அல்லது கைதியாக்கப்பட்ட சிப்பாய்கள்.

லிபியாவில் கைப்பற்றப்பட்ட பீரங்கிகள்—1,200.

சோமாலிலாண்டில் கைப்பற்றப்பட்ட பீரங்கிகள்—1,200.

கிஸ்மாயூவில் பிடித்த இடாலியக் கப்பல்கள்—5, மொத்த எடை 28,000 டன்கள்.

சோமாலிலாண்டு யுத்தத்தில் வேறுவிதமாக இடலி இழந்த கப்பல்கள்—5.

ஆப்பிரிக்காவில் இடலி இழந்த ஆகாய விமானங்கள்—1,000.

எரீட்ரியாவில் சுட்டு வீழ்த்தப்பட்ட இடாலிய ஆகாய விமானங்கள்—120.

(இவையல்லாமல், அநேக 'டாங்க்' கிகள். விமான எதிர்ப்பு பீரங்கிகள், லேசான பீரங்கிகள், போக்கு வரத்து சாதன வண்டிகள், உணவு, எண்ணெய், இதர சரக்கு சாமான்கள் முதலியவைகளெல்லாம் இந்த சண்டைகளில் பிரிட்டிஷ் சேனைகளால் கைப்பற்றப்பட்டன.)

இது எப்படிச் செய்யமுடிந்தது ?

ஜெனரல் வேவல் என்பவரின் வெற்றிகள் யுத்த சாமர்த்தியமான, ஆச்சரியப்படத்தகுந்த வெற்றிகள், குறைந்த நஷ்டத்துடன் பெற்ற பெரிய வெற்றிகள். இந்த வெற்றிகளுக்குக் காரணம், திறமையான தளகர்த்தத்தன்மை, கெட்டிக்காரத்தனமான சிப்பந்திகளின் வேலை, முன்னேக்கமுள்ள திட்டம் போடும் அமைப்பு, பிரிட்டிஷ் கப்பற்படை, ஆகாய விமானப்படை, தரைப்படை இவைகளின் ஒன்று சேர்ந்த யுத்ததந்திரம், சேனைகளின் சிறந்த போர் புரியுங் குணதிசயங்கள்—ஆகியவைகள்தான்.

இந்த ருசிகரமான கதையைச் சுருக்கமாகப் பின் வருமாறு கூறலாம் :—

லிபியா.

ஜெனரல் வேவல் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர், மார்ஷல் கிரேசியானி என்ற இடாலியத் தளகர்த்தரைவிட சில நாட்கள் முந்திக்கொண்டார் என்று இடாலியின் சர்வாதிகாரி முசலோனி குறை கூறுகிறார். இது, பிரிட்டிஷ் தளகர்த்தர், கெட்டிக்காரத்தனத்துடன் பின்னால் நடக்கப்போகும் விஷயங்களை முன்னாலேயே யூகித்து அதற்குத் தகுந்தபடி நடப்பவர் என்பதை ருஜுப்படுத்துகிறது. பிரிட்டிஷ் சேனைகள் மர்சா மாத்ரு என்ற ரயிலடியை டிசம்பர் மாதம் 7-ந்தேதி விட்டு நீங்கி, மிகரகசியமாகப் பாலைவனத்துக்குள் பிரவேசித்து, அடுத்த ஞாயிற்றுக் கிழமை பகைவர்களுக்குத் தெரியாமல் முக்கியமான இடங்களில் அமர்ந்து கொண்டன. முதலில் நடந்த சண்டையில், இந்திய சேனைகள் மிக முக்கியமானதும், மெச்சத்தகுந்ததுமான அளவுக்குப் போர் புரிந்து, சில வெற்றிகளை அடைந்தன. இடாலியர்களால் பலமாகப் பாதுகாக்கப்பட்ட நீபிவா என்ற யுத்த முகாமை, பிரிட்டிஷ் ஆகாய விமான உதவியைக்கொண்டு, இந்திய சேனைகள் திறமையாகச் சண்டை செய்து கைப்பற்றிக்கொண்டன. டிசம்பர் மாதம் 10-ந்தேதி பிரிட்டிஷ் சேனைகள் இடாலியின் முகாம்களை சுற்றிவளைத்துக்கொண்டன. அடுத்த நாள் சிடிபரானி என்ற முக்கியமான இடம் கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு ஆகிய திசைகளிலிருந்து தாக்கப்பட்டு, பிரிட்டிஷ் சேனைகளால் பிடிக்கப்பட்டது. மேற்குப் பாலைவன யுத்தத்தில், சிடிபரானியைப் பிடித்தது பெரும் வெற்றிகளில் முதலாவதாகும். இதில் 35,000 இடாலியர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். அநேக உபயோகமான யுத்த சாமான்கள் முதலியன கைப்பற்றப்பட்டன.

அடுத்ததாக, கபூசோ என்ற இடாலியக்கோட்டை கைப்பற்றப்பட்டது; சொல்லம் பிரதேசம் என்ற வட்டத்திலுள்ள இடாலியர்கள் எல்லோரும் துரத்தப்பட்டார்கள்; ஈஜிப்டு தேசத்தைவிட்டே இடாலியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். அதன் பிறகு லிபியா பிரதேசத்தில் சண்டை ஆரம்பித்தது. பார்டியா என்ற இடம் 20 நாள் முற்றுகையிடப்பட்டு, பிறகு பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, பிரிட்டிஷ் கடற்படை முதலியவைகள், சமயம் பார்த்துச்செய்த உதவியினால், ஜனவரி மாதம் 5-ந்தேதி, பிரிட்டிஷ் சேனைகளிடம் சரணாகதியடைந்தது. கொல்லப்பட்டவர்களும், கைதியாக்கப்பட்டவர்களும் மொத்தம் 44,868 இடாலியர்கள்; அநேக பெரிய பீரங்கிகளும், விமானப் போர்த் துப்பாக்கிகளும், 'டாங்க்'கிகளும், இதர யுத்த சாமான்களும் கைப்பற்றப்பட்டன.

டோப்ரூக் என்ற லிபியாவுக்குள் சுமார் 100 மைல் தூரமுள்ள இடம் ஜனவரிமீ 22உயில் பிடிக்கப்பட்டது; 20,000 இடாலியர்கள் கைதிகளாக்கப்பட்டார்கள்; இரண்டு பெரிய தளகர்த்தர்கள், ஒரு கப்பற்படைத் தலைவர், ஒரு பட்டாளத்தலைவர், ஒரு சேனைத் தலைவர் இக்கைதிகளுள் சேர்ந்தவர்கள். இதற்குள், லிபியாவில், இடலியின் பலத்தில் மூன்றில் இரண்டு பாகம் அழிந்துவிட்டது.

ஒரு வாரத்துக்குப் பிறகு தர்னா என்ற மீன் விசேஷமாக உள்ள துறைமுகமும், அதன் பின், 40 மைலுக்கப்பாலுள்ள அபலோனியா என்ற இட

கிழக்கு ஆப்ரிகா யுத்தரங்கத்தை விளக்கும் படம்.



மும் பிரிட்டிஷ்காரர்களால் பிடிக்கப்பட்டன. பிறகு, இடாலியின் சேனைத்தலைவர் மார்ஷல் கிரேசியானி என்பவர், ஈஜிப்டு தேசத்தைத் தாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சிரீனி என்ற தலைமை முகாமை, பிரிட்டிஷ் சேனைகள் கைப்பற்றிக்கொண்டன. அங்கிருந்து, 130 மைலுக்கப்பாலுள்ள பென்காசி என்ற இடத்தை, இரண்டு பாதைகளின் வழியே சென்று, இரண்டு இடங்களிலிருந்து தாக்கி, மூன்று நாட்களுக்குப் பிறகு பிரிட்டிஷ்காரர்கள் கைப்பற்றினார்கள். டோப்ரூக் என்ற இடத்தைப் பிடித்த பிறகு, ஜெனரல் வேவல் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர் தன் சேனையை இரண்டாகப் பிரித்து, ஒன்றை மேற்கு முகமாக, கரையோரப் பாதை வழியாக தர்னா, சிரீனி என்ற இடங்களுக்கும், மற்றொன்றை டோப்ரூக்குக்கு 90 மைலுக்கப்பாலுள்ள மேச்செல்லி என்ற இடத்தின் வழியாக, நாட்டுக்குள்ளும் அனுப்பினார். இந்த ஏற்பாடுகளெல்லாம் மிகுந்த ரகசியத்துடன் நிறைவேற்றப்பட்டன ; பகைவர்களுடைய தந்திப்போக்குவரத்து சாதனங்களை, பென்காசிக்குத் தெற்கில் பிரிட்டிஷ் யுத்த தளவாடங்கள் வெட்டிவிட்டன. இதற்குள், ஆஸ்திரேலியத் துருப்புகள் திடீரென்று அந்த துறைமுகப் பட்டணத்தைத் தாக்கின. யுத்த தந்திரத்தில் தோற்கடிக்கப்பட்டு, மிரண்டு பீதியடைந்த இடாலியர்கள் சண்டைபோடாமல், பென்காசியை சரணாகதியாகக் கொடுத்துவிட்டார்கள் ; யுத்தத்தில் வீண்வீரத்தைக் காட்டுவதைவிட, புத்திசாலித்தனமாக சரணமடைவது மேல் என்று அவர்கள் நினைத்தார்கள்.

பென்காசி என்பது மத்திய தரைக்கடலின் மேற்குப் பிரதேசத்திலும், மத்தியிலும், கண்ணோட்டமுள்ள ஒரு முக்கியமான இடம். அதனுடைய ஆகாய விமானச்சாலைகளும், துறைமுகமும், பெரிய யுத்த விமானங்களையும், சண்டைக்கப்பல்களையும், இதர போக்குவரத்து சாதனங்களையும், வைத்திருப்பதற்குச் சௌகரியமானவை. அது மால்டாவிலிருந்து 360 மைல் தூரத்திலுள்ளது.

பென்காசிக்கு 500 மைலுக்குத் தெற்கே உள்ள குப்ரா என்ற இடாலியின் ஆகாயவிமான முக்கிய இடத்தை, சுதந்தர பிரெஞ்சு சேனைகள் கைப்பற்றிவிட்டன.

எரீட்ரியா.

எரீட்ரியா என்ற பிரதேசத்தில், கசாலா என்ற இடத்திலிருந்து கேரன் என்ற இடம் வரைக்கும், இடாலியச் சேனைகளை துரத்தியடித்தது மெச்சத்தகுந்த ஒரு விஷயம். கிழக்காப்பிரிக்காவில் முசலோனியின் ஆகாய விமானப்படை முழுவதும் துடைக்கப்பட்டதென்றே சொல்லலாம். வெடிகுண்டு போடும் இடாலிய ஆகாய விமானங்களும், போர் புரியும் விமானங்களும், வீழ்த்தப்பட்டு, உருவிழந்து, உடைந்துகிடக்கின்றன. இம்மாதிரி அழிந்தவை 120 ஆகாய விமானங்கள் ; தப்பி ஓடிய விமானங்கள் சிகப்புக் கடற்கரையோரத்தில் மசாவா என்ற இடத்தில் ஒளிந்துகொண்டன. இடாலியின் கிழக்காப்பிரிக்கா ஏகாதிபத்தியத்தை ஒழிக்க பிரிட்டிஷ் சேனைகள் ஆரம்பித்தது முதலில் கால பாட் என்ற இடத்தை மறுபடியும் பிடித்த போதுதான். பிடித்துவிட்டு, 1940-ம் வருஷம் நவம்பர் மீ 11உயில் அபிசீனிய எல்லையைத் தாண்டி மீடெம்மா என்ற இடத்தை நோக்கி, இடாலியர்கள் துரத்திவிடப்பட்டார்கள். 1941-ம் வருஷம் ஜனவரி மீ 18உயில் எரீட்ரியாவில் கசாலா என்ற இடம் இடாலியர்களால் கைவிடப்பட்டது. இங்கிருந்து 110 மைல் தூரத்துக்கப்பாலுள்ள அகோர்தாத் என்ற இடத்துக்கு ஓய்வில்லாமல் இடாலியர்கள் துரத்தப்பட்டார்கள். திறமையும் தைரியமும் கொண்டு தாக்கியதன் காரணமாக, அகோர்தாத் என்ற இடமும் பிப்ரவரி மீ 1உ பிரிட்டிஷ்காரர்களால் பிடிக்கப்பட்டது. 1,000 பகைவர்கள் கொல்லப்பட்டார்கள், 500 இடாலியர்கள் கைதியானார்கள் ; அநேக யுத்த சாமான்கள் கைப்பற்றப்பட்டன. பாரெண்டு என்ற இடம் அடுத்த நாளே பிடிக்கப்பட்டது ; 450 இடாலியர்கள் கைதியானார்கள் ; அதிகமான அளவுக்கு யுத்த சாமான்கள் கைப்பற்றப்பட்டன. இந்திய சேனைகள், சிடிபரானியில் போர்புரிந்ததுபோல், விரைவாகவும் தைரியமாகவும், சிறந்த முறையில், பெருமை பாராட்டும் விதமாகப் போராடின. சீக்கியர்கள், ரஜபுத்திரர்கள், கார்வாலிகள், பலூசிகள், பஞ்சாபிகள், இந்திய இஞ்சினியர்கள், சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் ஆகிய பட்டாளங்களெல்லாம் திறமையாகப் போராடியதைப் பாராட்டி, அதை ஒரு மெச்சத்தகுந்த பெருங் காரியம் என்று ஜெனரல் வேவல் ஒரு தனி அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறார்.

அபிசீனியா.

டானா என்ற ஏரிக்கு வடமேற்கில், ஆயிரக்கணக்கான சதுர மைல்கள் இடாலியர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டன. அபிசீனியாவின் சக்கிரவர்த்தி ஹெயில் செலாஸியும், அவருடைய பிரதம தளகர்த்தர் ராஸ்காசாவும், பிரிட்டிஷ் பயிற்சி பெற்ற பட்டாளங்களுடைய உதவியினால் போர் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அபிசீனியாவின் தேசபக்தப் படைகள் இடாலியர்களுடைய ராணுவ நகராகிய பெரி என்ற இடத்தைப் பிடித்துக்கொண்டு, தெப்ரா-மார்கோஸ் என்ற இடத்தை நோக்கி ஓடும் இடாலிய சேனைகளுக்கு அதிக தொந்தரவு கொடுத்துக்கொண்டிருக்கின்றன. மேற்கு அபிசீனியாவில், தூசு நிரம்பிய ஒட்டகப்பாதை வழியாகவும் யானை உயரமுள்ள புல் நிறைந்த பிரதேசங்களின் வழியாகவும், பிரிட்டிஷ் பட்டாளங்கள் சென்று அசோசா என்ற இடத்தைத்தாக்கிக் கைப்பற்றிக் கொண்டன. சூடானியத் துருப்புகளும், கிழக்காப்ரிக்கா துருப்புகளும் அபோடு என்ற இடாலிய ராணுவ முகாமைக் கைப்பற்றி விட்டன. தெற்கிலிருந்து முன்னேறிச் சென்று, அபிசீனியத் தேசபக்தப்படைகள், மீகாவுக்கு 70 மைல் வடக்கிலுள்ள யாவெல்லோ என்ற இடத்தைப் பிடித்துக்கொண்டன. இடாலியின் சோமாலிலாண்டு பிரதேசத்திலிருந்து முன்னேறிச் செல்லும் பிரிட்டிஷ் பட்டாளங்கள், ஜிக்ஜிகா என்ற இடத்துக்கு 100 மைல் தெற்கிலுள்ள தாகபூரில் பகைவர்களைத் திடும்பிரவேசமாகத் தாக்கி, அநேக சிப்பாய்களைக் கைதியாகப் பிடித்துக்கொண்டன. ஹரார் என்ற பிரதேசத்தில் மத்திய பாகத்துக்குக் கடுவேகமாக பிரிட்டிஷ் சேனைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

ஆகவே, அபிசீனியா பல முனைகளிலிருந்து தாக்கப்பட்டு வருகிறது. தாக்கும் பட்டாளங்களுக்கு பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை திறமையான உதவி செய்துகொண்டிருக்கிறது. 1,700 இடாலியத் துருப்புகள் இடாலியப் பட்டாளத்தைவிட்டு விலகிவிட்டன. அட்டிஸ் அபாபா என்ற அபிசீனியாவின் தலைநகரை நோக்கிச் செல்லும் முயற்சி சீக்கிரம் நடக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அட்டிஸ் அபாபா இப்போது மின்சார கம்பிகள் மூலம் பாதுகாப்புக்காக சுற்றிலும் வளைக்கப்பட்டு கைதிகள் வைக்கும் இடம்போல இருக்கிறது ; அது ஒரு இடாலியப் பட்டணமாக மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. அபிசீனியர்களெல்லாம் அநேக மைல்களுக்கப்பால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு பட்டணத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

அபிசீனியாவில் பிரிட்டனுக்கு யாதொரு இட சுதந்தரமும் வேண்டியதில்லை என்றும், அபிசீனிய சக்கரவர்த்திக்கு உதவிசெய்து அந்நாட்டை மீண்டும் அவருக்குக் கொடுப்பதற்கு முயற்சிக்கப்படுகிறதென்றும், சண்டை முடிந்த பிறகு அகில தேசீய ஏற்பாட்டின்படி அரசியலிலும், பொருளாதார விஷயங்களிலும் வேண்டிய உதவி கொடுக்கப்படுமென்றும், எதியோபியர்களுடைய நாடாகிய அபிசீனியா சுதந்தர நிலைமையை அடையவேண்டுமென்றும், சக்கரவர்த்தி மீண்டும் தம்முடைய சிம்மாசனத்தைப் பெறும் உரிமையைத் தாம் அங்கீகரிப்பதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒகு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

இடாலிய சோமாலிலாண்டு.

ஜூபா ஆற்றிலிருந்து வெப்டிஷிபிள் வரைக்கும் உள்ள இடாலிய சோமாலிலாண்டு பிரதேசம் இப்போது பிரிட்டிஷ்காரர்களுடைய கையிலிருக்கிறது. தென்னாப்பிரிக்கா படை, கிஸ்மாயூ என்ற இரண்டாவது பெரிய துறைமுகத்தை பிப்ரவரி மீ 15உயில் கைப்பற்றிக்கொண்டு ஆயிரக்கணக்கான இடாலியர்களைக் கைதிகளாகப் பிடித்தது. கிஸ்மாயூவுக்கு 150 மைல்களுக்கப்பாலுள்ள ப்ராவா என்ற இடத்தை மேற்கு ஆப்பிரிக்கா படைகள், பிப்ரவரி மீ 21உயில் கைப்பற்றின. அடுத்த நாளே இடாலிய சோமாலிலாண்டின் தலைநகராகிய மோகதீசு என்ற இடம் தென்னாப்பிரிக்காப் படைகள் கையில்சிக்கியது. மார்ச்சு மீ 7உயில் பர்பர் என்ற இடமும், மார்ச்சு மீ 9உயில் மோகதீசு—ஹரார் பாதையில் உள்ள கேப்ரேதார் என்ற இடமும், பிரிட்டிஷ் படைகளால் பிடிக்கப்பட்டன. இடாலிய சேனைகள் இரண்டு பிளவாகப் பிரிந்து வெவ்வேறு வழியாக வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கப்பற்படையின் உதவியும் ஒத்துழைப்பும் மிகவும் பிரயோசனமாயிருந்தன. அதனுடைய உதவியினால்தான் அநேக இடாலிய கப்பல்கள் கைப்பற்றப்பட்டன ; பல முழுகடிக்கப்பட்டன. எல்லா துறைமுகங்களும், ஏறக்குறைய எல்லா கரையோரப்பட்டணங்களும், இதாவசிக்குமிடங்களும், பிரிட்டிஷார் கையில் அகப்பட்டுவிட்டன.

குறைந்துகொண்டேபோகும் பட்டாளங்களும், வெளியிலிருந்து எந்தவித உதவியும் எதிர்பார்க்க முடியாத நிலைமையிலும் உள்ள எரீட்ரியா, அபிசீனியா, சோமாலிலாண்டு பிரதேச இதாலியர்கள் மிகவும் துர்ப்பாக்கிய நிலைமையில் இருக்கிறார்கள்.

மார்ச்சு மீ 17உயில் பிரிட்டிஷ் சோமாலிலாண்டின் தலைநகரான பார்பரா என்ற இடம், இடாலியர்களிடமிருந்து திருப்பிக் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. இனிமேல் அட்டிஸ் அபாபா நிச்சயமாக பிரிட்டிஷ் துருப்புகளால் சீக்கிரத்தில் கைப்பற்றப்படும் என்று நம்பப்படுகிறது.

பிரசிடெண்டு ரூஸ்வெல்ட்டின் அருமையான பேச்சு.

சர்வாதிகாரிகளுக்குக் கடுமையான எச்சரிக்கை.

சென்ற சனிக்கிழமை மாலை, அமெரிக்காவின் தலைவர் ரூஸ்வெல்ட் 'ஒயிட் ஹவுஸ்' நிருபர்கள் சங்கத்தில் ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். அதில் சர்வாதிகாரிகளுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை செய்து, பிரிட்டன், க்ரீஸ், சைனா முதலிய நாடுகளுக்கு, அமெரிக்கா ஐக்கிய நாடுகள் உதவி செய்யும் என்று உறுதி கூறினார். ஜூன் 1940-ல் பிரான்சு வீழ்ச்சியடைந்த பிறகு, இது தான் மிகவும் முக்கியமான சம்பவம் என்று நிச்சயமாய்க் கூறலாம். இதனால் நான்கு விஷயங்கள் விளக்கமாகத் தெரிகின்றன. அவையாவன :—

(1) எதேச்சாதிகாரிப் படையெடுப்பை எதிர்ப்பதில் அமெரிக்கா ஒரு முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும்.

(2) உலகத்தில் சுதந்தரம் நிலைபெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கை அமெரிக்காவின் இருதய பூர்வமான கொள்கை.

(3) குடியாட்சிகளுக்கு உதவி செய்யும் உயர்ந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டை, அமெரிக்காவின் ஒரு கோடியே 30 லட்சம் மக்கள் முழுமனதுடன் ஆதரிக்கிறார்கள்.

(4) இந்த யுத்தம் எந்த விதமாக முடியும் என்பதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் பேச்சு, யுத்தத்திற்குப்பிறகு உலக நிர்மாண சீர்திருத்தத்தில் அமெரிக்கா முக்கியமான வேலை செய்யும் என்று கூறியது கவனிக்கத்தக்கது. "எங்களுடைய தேசம் தன்னுடைய முழுக்கடமையையும் செய்யும் ; சர்வாதிகாரத்தனம் அழிந்து போனதும்—நாம் எதிர்பார்ப்பதைவிட கூடிய சீக்கிரத்தில் அது அழிந்துவிடும்படி கடவுள் உதவி செய்வார்—அமெரிக்கா உலக நிர்மாண சீர்திருத்தத்தில் தீவிரமான வேலை செய்யும்," என்று அவர் கூறியிருக்கிறார். "ஒவ்வொரு தேசமும், அது எவ்வளவு சிறு தேசமாயிருந்தாலும்சரி, தன்னுடைய தேசீயத்தைப் பாதுகாக்க உரிமை உண்டு" என்று அவர் கூறியிருப்பது சிறு தேசங்களின் சுதந்தர உரிமையைப்பற்றி அவர் யாதொரு சந்தேகமுங் கொள்ளவில்லை என்பதை அறிவிக்கிறது.

அமெரிக்கா செய்யப்போவது.

அமெரிக்கா சட்டசபை, பிரிட்டனுக்கு உதவிசெய்ய வாடகை-கடன் மசோதா நிறைவேற்றியது ; அதைக் குறித்து அமெரிக்கா செய்யப்போவது என்ன என்பதைப்பற்றி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியதாவது :—

"சென்ற யுத்தத்தில், அமெரிக்கா பிளவுகளுள்ள நாடென்று ஜெர்மனியின் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது எங்களுடைய ஒற்றுமையைப்பற்றி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள சர்வாதிகாரிகள் யாதொரு சந்தேகமும் கொள்ளவேண்டியதில்லை. இந்த யுத்தம் தொடங்கியதும், வருங்காலத்தைக் குறித்து நான் கவலை கொண்டேன் ; நான் அதிகமாகக் கவலைகொள்ளவில்லை என்று இப்போது தெரிகிறது."

"அமெரிக்காவின் மக்கள் புதிதாக இப்போது சரித்திரத்தை எழுதுகிறார்கள். இவ்வாரத்திய பெரிய சமாச்சாரம், ஒற்றுமையுள்ள குடியரசாகிய அமெரிக்கா, ஒரு பெரிய அபாயத்தைத் தடுப்பதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறது என்பதாகும்."

மேலும், அமெரிக்கர்கள் இக்காரியத்துக்காக, பல தியாகங்கள் செய்யவேண்டுமென்றும், குறைந்த லாபம், அதிகமான வரிகள், நீண்ட வேலை நேரம், இவைகளுக்குத் தயாராயிருக்கவேண்டுமென்றும், இம்மாதிரியான ஒரு பெரிய காரியத்துக்காக நல்ல தொண்டு செய்யும்படியான சந்தர்ப்பம் இதுவரையில் கிடைத்ததில்லை என்றும், வருங்கால மக்கள் தாம் செய்த காரியத்தை வாழ்த்துவார்களென்றும், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

சர்வாதிகாரிகளுக்கு எச்சரிக்கை.

சர்வாதிகாரிகள் பேச்சுகளிலும், செய்கைகளிலும் உண்டாகும் உலகத் தீங்கைப்பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தம்முடைய அபிப்பிராயத்தை யாதொரு மறைப்புமில்லாமல் கூறியிருக்கிறார். நாஜிக் கொள்கை, பழைய ப்ரஷ்யாவின் எதேச்சாதிகாரத்தைவிட மோசமானதென்றும், அதிகாரத்தைப் பலாத்காரத்தினால் கைப்பற்றிக்கொண்டு சிலர் மக்களையெல்லாம் அடிமைப்படுத்தி, தேர்தல் மூலம் மக்கள் அரசாங்கம் நடத்தும் முறையை ஒழிப்பதற்காக வெளிப்படையாக முயற்சிக்கிறார்களென்றும், இந்தப் "புதிய ஒழுங்கு" புதிதுமல்ல, ஒழுங்குமல்லவென்றும், அமெரிக்காவின் சட்டசபை முடிவு, சர்வாதிகாரிகளோடு சமாதானம் வைத்துக்கொள்வதல்லவென்றும், கொடுங்கோன்மையோடு சமரசம் வைத்துக் கொள்ள முடியாதென்றும், சர்வாதிகாரிகள் உலகத்தை ஆள்வதற்கு ஒரு உயர்ந்த அதிகார வர்க்க சமூகம் இருப்பதாகப் பெருமையடித்துக்கொள்வது பைத்தியக்காரத்தனமென்றும், அம்மாதிரியான பெருமையை ராணுவ பலத்தினாலும், சமூக பலத்தினாலும் மற்ற தேசங்களின் அடிமைத்தனத்துக்குக் காரணமாக ஆக்கும் தேசம் உலகத்திற்கு எப்போதும் பிரயோசனப்படாதென்றும், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் விளக்கிக் கூறினார்.

குடியரசு நாடுகள்.

குடியரசு நாடுகளின் வருங்காலத்தைப்பற்றி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சில வார்த்தைகள் கூறியிருக்கிறார். 1939–1940-ல் ஒன்றன்பின்னொன்றாக ஐரோப்பிய தேசங்கள் சர்வாதிகாரிகளின் திட்டத்தின்

படி அழிக்கப்பட்டனவென்றும், ஆனால் அவர்களின் கால அட்டவணையை தோற்கடிக்க, முடியாத பிரிட்டன், தூள்தூளாகச் சுட்டொழித்ததென்றும், குடியரசு என்ற சுடர்விளக்கு எப்போதும் எரிந்து கொண்டேயிருக்கவேண்டுமென்றும், திரியைச் சரிப்படுத்தி, விளக்கைச் சுத்தப்படுத்துவது மாத்திரம் போதாதென்றும், சுடர் எப்பொழுதும் கொழுந்துவிட்டெரிவதற்கு ஏராளமான பண உதவி செய்ய வேண்டுமென்றும், குடியரசுக்கு அழிவு நேரிட்டால், பேச்சுச் சுதந்தரம், மத சுதந்தரம், வறுமை, பயம் முதலியவற்றிலிருந்து விடுதலை முதலியவை விலக்கப்பட்டவையாய்விடுமென்றும், இங்கிலாந்து, க்ரீஸ், சைனா, அமெரிக்கா முதலிய நாடுகள் விஷயத்தில் இவை உண்மையென்றும், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

கிரேட் பிரிட்டன்.

நாஜிகளுக்கு எதிரிடையாக தைரியத்தோடும், பெருந்தன்மையோடும் போராடும் பிரிட்டனைப்பற்றி மிஸ்டர் வெண்டெல் வில்கி முதலியவர்கள் பிரசிடெண்டுக்கு கூறியதன்பயனாக, யாதொருவித தடங்கலும் இல்லாமல் பிரிட்டன் தைரியத்தோடு நடத்தும் யுத்தத்தைப்பற்றியும், இந்த நெருக்கடியான சமயத்தில் அதற்குத் தலைவராக வந்த மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலின் திறமையைப்பற்றியும், அவர் சிறப்பாகப் பேசியிருக்கிறார்.

அமெரிக்காவின் உதவி.

முடிவாக, எவ்வளவு தூரம் அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்யும் என்பதைப்பற்றி ஒருவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் அவர் விளக்கமாகக் கூறியிருக்கிறார். யுத்த சாமான்கள் முழு வேகத்துடன் செய்யப்படுமானால், குடியரசுகள் சர்வாதிகாரத்தைத் தோற்கடிக்க முடியுமென்பதை ருசுப்படுத்தலாமென்றும், அமெரிக்காவில் எவ்வளவு ஆகாய விமானங்கள், இதர யுத்த ஆயுதம் முதலியவைகள் பிரிட்டனுக்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு அனுப்பப்படுமென்றும், அமெரிக்காவினுடைய யுத்த உதவி இப்போது முழு உதவியாய்விட்டதென்றும், பிரிட்டன், க்ரீஸ், சைனா முதலிய நாடுகளுக்கு வேண்டிய யுத்தக் கப்பல்கள், ஆகாயவிமானங்கள், உணவுப்பொருள்கள், 'டாங்க்'கிகள், பீரங்கிகள், வெடிகுண்டு மருந்துகள் முதலியவையெல்லாம் அமெரிக்காவால் கட்டாயம் அனுப்பப்படுமென்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் உறுதி கூறினார்.

முக்கியமாக, நூதனமான ஆகாயவிமானங்களை அமெரிக்கா பிரிட்டனுக்கு அனுப்பலாம். அவைகளில் ஒன்று லாக்ஹீட் ஹட்சன் என்ற வேவு பார்க்கும் வெடி குண்டு விமானம். இது பிரிட்டனில், வடக்குக் கடல் மேலும், கரையோரப் பாதுகாப்புப் படையின் உதவிக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஜெர்மன் ஆகாயவிமானப்படையுடன் அநேக தடவை போர்புரிய உபயோகப்படுத்தப்பட்டது. இது 6,000 அடிக்குமேல் 1,700 "ஹார்ஸ் பவர்" அல்லது குதிரை பலங்கொண்ட எஞ்சின்களுடையது. ஹட்சனுக்குப் பதிலாக வேறு புதிதான ஆகாயவிமானம் அமெரிக்காவில் செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் டக்லஸ் டி. பி-7 என்பதாகும். பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையைச் சேர்ந்தவர்கள் இதை பாஸ்டன் என்று பெயரிட்டிருக்கிறார்கள். மணிக்கு 320 மைல் போகக்கூடியது; கடலில் 280 மைல் போகக்கூடியது.

இதல்லாமல், நான்கு எஞ்ஜின்களுடைய "கன்சாலிடேடட் B-24" என்ற பெயருடைய ஆகாய விமானங்களில் 120 சமீபத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வாங்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். "பறக்கும் கோட்டை" என்பது மற்றொரு விதமான நான்கு எஞ்ஜின்களுடைய ஆகாயவிமானம். மார்டின் 167-A 3 என்பது வெடிகுண்டு போடும் "பாம்பர்" என்ற ஆகாயவிமானம்; 1,250 பவுன் எடையுள்ள வெடிகுண்டுகளைத் தாங்கிச் செல்லும் சக்தியுடையது; மணிக்கு 316 மைல் போகக்கூடியது; கடலில் 248 மைல் போகும். மற்றும் கர்டிஸ் ஹெல்டைவர்ஸ், கர்டிஸ் ஹாக், புரூஸ்டர் பபலோ, ஹாக்கர் ஹரிகேன் ஆகிய அமெரிக்காவின் நவீன ஆகாய விமானங்கள் பிரிட்டனுக்கு அதிகமாக உதவலாம்.

பால்கன் பிரதேசத்தில் தற்போதைய நிலைமை.

மிஸ்டர் ஈடன் துருக்கிக்கும், ஈஜிப்டுக்கும் விஜயம் செய்ததும், வாடகை—கடன் சட்டத்தை அதிவிரைவில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் மனவுறுதியும், பால்கன் பிரதேசத்தில் நல்ல பலன்களைக் கொடுத்திருக்கின்றன. தனிப்பட்ட நிலையில் இருக்கும் யூகோஸ்லாவியா இதுவரைக்கும் நாஜிகளுடைய நயவஞ்சக வார்த்தைகளில் ஏமாறாது, ஜெர்மனியுடன் உடன்படிக்கை வைத்துக்கொள்ள இஷ்டமில்லாமல் இருக்கிறது. இந்த வார ஆரம்பத்தில், யூகோஸ்லாவியாவின் முதல் மந்திரியும், அயல் நாட்டு மந்திரியும், பர்லினுக்குப் போய், தங்களுடைய நாட்டு சுதந்தரத்தை ஜெர்மனியிடம் ஒப்படைப்பார்கள் என்று நாஜிகள் நம்பிக்கையுடன் தெரிவித்தார்கள். ஜெர்மனியிலிருந்து பிரத்தியேகமான யுத்த ஆகாய விமானம் அவர்களை அழைத்துப் போவதற்காக, யூகோஸ்லாவியாவின் தலை நகராகிய பெல்கிரேடுக்கு அனுப்பப்பட்டதாகவும் ஒரு வதந்தி இருந்தது. ஆனால், யூகோஸ்லாவ் மந்திரிகள் பெர்லினுக்கு போகவில்லை. பிரிட்டிஷ் பிரதிநிதி, சர் ரொனால்டு காம்பெல், யூகோஸ்லாவியாவின் பிரதம மந்திரியுடன் நீண்ட நேரம் பேசினார்; ஜெர்மன் பிரதிநிதி அயல்நாட்டு மந்திரியுடன் பேசியது பயன் பெற்றதாகத் தெரியவில்லை. க்ரீஸ் தேசத்தின் முக்கியமான துறைமுக பட்டணமாகிய சாலோனீகாவை ஜெர்மனி கைப்பற்றுவதை, யூகோஸ்லாவியா விரும்பவில்லை என்று தெரிகிறது; அதனால் தன்னுடைய சுதந்தரத்துக்குப் பங்கம் வரும் என்று யூகோஸ்லாவியா பயப்படுகிறது.

பால்கன் நிலைமையைப்பற்றிக் கவனிக்கும்போது ஜெர்மனி தன்னுடைய ஏராளமான பலத்தை அவ்விடத்தில் உபயோகிக்கலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால், துருக்கியினுடைய உறுதியான நோக்கத்தைக் கண்டு, யூகோஸ்லாவியா தைரியம் கொண்டிருக்கிறது. துருக்கிக்கு ஹிட்லர் சமீபத்தில் எழுதிய கடிதத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நம்பாமல், யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறது. க்ரீஸ் கடுமையான பாரத்தைத் தாங்கி வந்தபோதிலும், இடாலியர்களை வெற்றிகரமாக விரட்டி ஓட்டிவிட்டது. பால்கன் பிரதேசத்தில் சண்டையைக் கொண்டுவர முயற்சிப்பதாக ஜெர்மனியை ரஷ்யா கண்டித்திருப்பது, யூகோஸ்லாவியா ஜெர்மனியை எதிர்ப்பதற்கு ஒரு காரணம். மேலும், பிரிட்டன் எந்த மாதிரி உதவியை யூகோஸ்லாவியாவுக்குச் செய்யும் என்பதை மிஸ்டர் ஈடனும், சர் ஜான் டில்லும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாகக் கூறியிருக்கிறார்கள். ஜெர்மனியும் இடலியும், திட்டங்கள், பயமுறுத்துதல்கள், நல்ல வார்த்தைகள் ஆகிய இவைகளையெல்லாம் சமயத்திற்குத் தகுந்தபடி உபயோகப்படுத்திக்கொண்டு வருகின்றன. ஆனால், பிரிட்டன் தான் என்ன செய்வதாக தன்னுடைய நேச நாடுகளுடன் ஒத்துக்கொண்டிருக்கிறதென்பதை வெளிப்படுத்தவில்லை.

துருக்கி ஜெர்மனியுடன் போர் புரிய நேர்ந்தால் தான் அதில் கலப்பதில்லை என்று ரஷ்யா துருக்கிக்குச் சொல்லியிருப்பதாக ஒரு ஊர்ஜிதமாகாத அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டன் பர்பராவைக் கைப்பற்றியது.

பிரிட்டிஷ் கொடி, பிரிட்டிஷ் சோமாலிலாண்டின் தலை நகராகிய பர்பராவில் மீண்டும் பறக்கிறது. இடாலியின் ஆதிக்கத்தின் முடிவைக்காட்ட இது ஒரு அறிகுறி. பிரான்சு சரணமடைந்ததும், இடாலி பிரிட்டனோடும், அதன் நேச நாடுகளோடும் போர் தொடுத்து பிரிட்டிஷ் சோமாலிலாண்டைக் கைப்பற்றிக் கொண்டது. அப்போது அந்தப் பிரதேசத்தில் ஒரு சிறு பிரிட்டிஷ் போலீஸ் படைதான் இருந்தது. பிரிட்டிஷ் படை அந்தப் பிரதேசத்தை விட்டுப் போனதும், "பிரிட்டன் அழிந்து விட்டது. இனிமேல் தப்புவது கஷ்டம்" என்று கூறப்பட்டது. "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முறிந்து விழுவது நிச்சயம். பிரிட்டிஷ் கப்பற்படை சிகப்புக் கடலுக்குள் போக முடியாது" என்று ரோம் ரேடியோ கூச்சலிட்டது. கொஞ்ச காலம் பொருத்து, ஜெனரல் வேவல் நடத்திய கோடையிடிப் போர் முறைகள், இடாலிய தளகர்த்தர் மார்ஷல் கிரேசியானியைத் தோற்கடித்து, மீண்டும் பிரிட்டிஷ் சோமாலிலாண்டைக் கைப்பற்ற முடிந்தது. பிரிட்டிஷ் கப்பற்படை, ஆகாய விமானப் படை ஆகிய இவைகளின் உதவிகொண்டு, சென்ற ஞாயிற்றுக் கிழமை, மார்ச்சு 16-ல் பர்பரா கைப்பற்றப்பட்டது. கைப்பற்றிய பிரிட்டிஷ் துருப்புகள் யுத்தக் கப்பல்களில் பர்பராவுக்கு ஏற்றிச் செல்லப்பட்டார்கள். இதனால் மத்தியதரைக்கடல் இடாலியின் சொந்த எரியல்லவென்றும், பிரிட்டிஷ் கப்பற்படைதான் எப்போதும் போல கடலை ஆள்கிறதென்றும் தெரியவரும்.

பர்பராவைப் பிடித்தபிறகு, அடுத்த லக்ஷியம் அட்டிஸ் அபாபாதான். அது இடாலியின் கிழக்காப்பிரிக்கா ஏகாதிபத்தியத்தின் இருதய ஸ்தானம் போன்றது. 13 திக்குகளிலிருந்து பிரிட்டிஷ் சைனியங்கள் அபிசீனியாவின் தலை நகரை நோக்கிச் செல்கின்றன. ஹரார், திரிடூவா என்ற இடாலியின் யுத்த ஸ்தானங்களும் தாக்கப்படலாம்.

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.